11.08.2025 OS.No.41/2016 DW1 Name :.உதயகுமார்

குறுக்கு விசாரணை

1. சத்தியமூர்த்தி என்னுடைய தகப்பனார். அவருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரை வழக்கில் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. என்னுடைய முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் நீலாம்மாளிடம் கிரைய வாங்கிய சொத்து 55 செண்ட் என்று கூறியுள்ளேன். என்னுடைய தந்தையார் நீலாம்மாளிடம் பணம் வாங்கிய போது நான் இருந்தேன். அந்த ஆவணத்தில் நான் சாட்சி கையெழுத்து எதுவும் போடவில்லை.
2. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களுக்கான பத்திர பேப்பர்களை என் தகப்பனார் தான் வாங்கி வந்தார். பிசாஆ1 ஆவணத்தில் உள்ள முத்திரை தாள் 18.06.2012ல் என் தகப்பனார் பெயரில் வாங்கபட்டுள்ளது. அது விக்கிரைய ஒப்பந்தம் ஆகும். என் தகப்பனாருக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணம் தேவையிற்காகவும் என் பெயருக்கு ஆவணம் எழுதினார். அந்த ஆவணம் எழுதுவதற்கு முன் நீலாம்மாள் என் அப்பா பெயருக்கு பொதுஅதிகார ஆவணம் ஒன்று எழுதி கொடுத்துள்ளார்.
3. அது 20.06.2012ல் எழுதபட்டுள்ளது. அதற்கான முத்திரை தாள் பேப்பர்களை என் தகப்பனார் தான் வாங்கி வந்தார். அதற்கான முத்திரை தாள் 18.06.2012ல் வாங்கபட்டது என்றால் சரியல்ல. எனக்கும் என் தகப்பனாருக்கும் 10.07.2012ல் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்பட்டது. அது பதிவு செய்யபட்து. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். பொதுஅதிகார பத்திரத்தில்

யார் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள் என்பது தெரியும். ராஜேந்திரன், சின்னதம்பி, சௌந்தர்ராஜன் ஆகியோர்கள் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள்.

4. நீலாம்மாள் குடும்பத்தினர் யாரும் பொதுஅதிகார பத்திரத்தில் கையெழுத்து போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் அடிப்படையில் என் தகப்பனார் எனக்கு கிரையம் எழுதிகொடுக்கவில்லை. என் பெயருக்கு என் தகப்பனார் கிரையம் எழுதி கொடுத்த சமயத்தில் நீலாம்மாள் அந்த ஊரில் தான் இருந்தார். அவரிடம் நேரிடையாக நான் கிரையம் வாங்கவில்லை. பொதுஅதிகார ஆவணம் இருந்ததால் என் தகப்பனாரே கிரையம் கொடுத்தார்.
5. என் தந்தையார் நீலாம்மாளுடன் ஏற்படுத்திய கிரைய ஒப்பந்தம்படி எந்த ஒரு கிரையமும் செய்யபடவில்லை. பொதுஅதிகார ஆவணம் எழுதிய சமயத்தில் நான் உடன் இருந்தேன். அந்த சமயத்தில் சொத்தின் மதிப்பு ரூ.6,00,000/- மேல் இருக்கும். என் பெயருக்கு கிரையம் எழுதிய தேதியிலும் அதே மதிப்பு தான் இருக்கும். ஊராட்சி மன்ற தீர்மானத்தின் படி தாவா சொத்தை மனைபிரிவுகளாக போட்டேன். உயர்அதிகாரிகளிடம் அனுமதி எதுவும் வாங்கவில்லை. மனைபிரிவு போட்ட காலத்திலிருந்து நீலாம்மாள் குடும்பத்தினர் ஆட்சேபனை செய்து வருகிறார்கள் என்றால் அவ்வாறு இல்லை.
6. ஊராட்சி மன்ற தீர்மான காலத்தில் நீலாம்மாள் மகன் சௌந்தர்ராஜன் உறுப்பினராக இருந்தார். தீர்மான கூட்டத்தில் அவர் கலந்து கொள்ளவில்லை. ஊராட்சி மன்றத்திற்கு தானம் கொடுத்த ஆவணத்தில் நீலம்மாளிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. ஊராட்சி ஒன்றிய தலைவரும் அதை கேட்கவில்லை. மனைபிரிவு விற்பனை செய்யும் போது நீலம்மாள் குடும்பத்தினர் ஆட்சேபனை

செய்தார்கள் என்றால் இல்லை. 28.12.2015ல் நீலாம்மாள் மாவட்ட கண்காணிப்பாளிரிடம் புகார் கொடுத்தார். புகார் விசாரணையில் கடனுக்கு தான் பத்திரம் எழுதபட்டது என்பதை ஒப்புக்கொண்டோம் என்றால் சரியல்ல.

7. இருதரப்பையும் விசாரித்து புகார் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாவட்ட பதிவு துறையிடம் புகார் கொடுக்கபட்டது. முறையாக ஆவணம் செய்யபட்டுள்ளது என உத்தரவு கொடுக்கபட்டது. மாவட்ட பதிவாளர் நீதிமன்றம் உத்தரவு எடுக்கவேண்டும் என கூறினார் என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. மனை எண். 15, 16யை ரீனாவுக்கு ஒதுக்கினோம். ரீனா கட்டிடம் கட்டும் போது அதை நீலம்மாள் குடும்பத்தினர் தடுத்தார்கள் என்றால் தடுக்கவில்லை.

8. வாதி எங்கள் மீது மோசடி வழக்கு போட்டுள்ளார். மனைபிரிவுவில் நான்கு தனிநபர்களும் அரசாங்கவும் வீடு கட்டியுள்ளது. கணினி மையம் கட்டிடம் கட்டி முழுமையடைந்துள்ளது. மக்கள் பயன்பாட்டிற்கு அது வரவில்லை. தாவா சொத்தில் உள்ள மரங்களை வறட்சி காரணமாக அப்புறப்படுத்தி மனை போட்டோம். அதை நீலாம்மாள் குடும்பத்தினர் தடுக்கவில்லை. மரங்களின் மதிப்பு ரூ.30,00,000/- இருக்கும் என்று சொன்னால் சரியல்ல. சுமார் ரூ.13,00,000/- மனைகளை விற்றுள்ளேன்.

9. அது ரூ.1 கோடி இருக்கும் என்றால் சரியல்ல. எங்களுடைய ஆவணங்களை அனைத்தையும் ரத்து செய்ய வாதி பரிகாரம் கேட்டுள்ளார் என்றால் அது தவறாகும். நீலாம்மாளிடம் வெற்று ஆவணங்களில் கையெழுத்து பெற்று மோசடியாக ஆவணங்களை உருவாக்கியுள்ளோம் என்றால் சரியல்ல. நீலாம்மாள் ரூ.4,00,000/-

மட்டும் என் தகப்பனாரிடம் கடன் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அதை திருப்பி கொடுக்கும் காலத்தில்தான் மோசடியான ஆவணங்கள் குறுத்து வாதி தெரிந்து கொண்டார் என்றால் சரியல்ல. உண்மையை மறைப்பதற்காக என் தகப்பனாரை விசாரிக்காமல் நான் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 11/08/2025 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2025.08.11 15:22:40 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.